
ST. MARY
OF EGYPT

## ஏப்ரல் 27

## *புனித எஜிப்து மரியம்மாள்*

இவள் 12-ஆம் வயதில் வீட்டை விட்டு அலெக்சாந்திரியா நகருக்கு ஓடி 17 ஆண்டுகளாக தனது சீர இச்சைகளை திருப்தி செய்வதிலேயே முனைந்திருந்தாள். ஒரு நாள் ஏராளமான மக்கள் எருசலேமுக்கு செல்வதைக் கண்டு இவளும் அவர்களோடு போனாள். கோவிலில் நுழைய இவளால் முடியவில்லை. காணப்படாத கரம் இவளைத் தடுத்தது. இவள் மார்பில் பிழை தட்டிக்கொண்டு அழுது புலம்பினாள். மாதாவின் படம் ஒன்று இவளின் கண்ணில்பட்டது. அன்னையை நோக்கி உருக்கமாக மன்றாடினாள். "தாயே, நீர் ஒப்பு உயர்வற்ற தூய்மையுள்ளவள். நானோ கற்பை இழந்தவள். எனது சகல அக்கிரமங்களுக்காகவும் இப்போது மனம் வருந்துகிறேன். உம்முடைய மகனை (இயேசுவை) மன்றாடி என் பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றுத் தாரும்" என்றாள். தேவதாய் பாவிகளின் அடைக்கலம். இந்த பாவிக்கு மன்னிப்புப் பெற்றுக் கொடுத்தாள். பின்னர் இவள் கோவிலில் நுழைந்து செபித்தாள். யோர்தான் நதியைக் கடந்து காட்டுக்குச் சென்று கடும் தவ முயற்சிகளை செய்து வந்தாள். 47 ஆண்டுகளாக இவள் யாரையும் பார்த்ததில்லை. பழைய பாவ நினைவுகள் இவளை இடைவிடாது வாட்டியது. இவள் அழுது கொண்டு மாதாவின் உதவியை நாடினாள். மாதா இவளைக் கைவிடவில்லை. நெடுங்காலத்திற்குப் பின் சோசிமுஸ் என்ற மடாதிபதி காட்டில் இவளைக் கண்டார்.
தன் வரலாற்றை இவள் அவரிடம் கூறினாள்.

### சிந்தனை:

"தேவதாய் பாவிகளின் அடைக்கலம், கற்பைக் காக்க, இழந்த கற்பைத் திரும்பப் பெற அன்னை உதவி செய்வாள்".

### செபம்:

பாவிகளுக்கு அடைக்கலமே, பாவிகள் மனந்திரும்ப வேண்டிக் கொள்ளும்.